DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi. M. Mayadevi, B.A.,L.LB.,**
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | CC.No. 26/2011 |
| Deposition of Witness for Prosecution | PW: 3 Additional witness |
| Cr.No. and Police Station : | 252/2009 , சேத்தியாதோப்பு காவல்நிலையம் |
| Name: | திரு. முரளி (உதவி ஆய்வாளர்) |
| Father's /Husband Name: | |
| Village: | |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 13.07.2026** | |

A1 present. A2 called absent. U/s. 355 BNSS petition filed and allowed.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது சேத்தியாதோப்பு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் சம்பந்தம் பணி மாறுதல் பெற்று வேறு பணியிடம் சென்றுவிட்ட நிலையில் மேற்படி காவல் உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு தெரியும் என்ற வகையிலும் வழக்கு கோப்பின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தின் அனுமதி பெற்று சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 30.09.2009 ந் தேதி 2.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பந்தம் சேத்தியாதோப்பு காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது துரைராஜ் மகன் ராஜேந்திரன் என்பவர் அளித்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.252/2009 பிரிவுகள் 341, 352, 506(1), 497 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்**. மேற்படி மனு அ.சா.2 ஆகும் , முதல் தகவல்அறிக்கை அ.சா. ஆ.3 ஆகும்.** பின்னர் உதவி ஆய்வாளர் சம்பந்தம் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தில்லை நடராஜன், மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **அவை முறையே அ.சா.ஆ 4 மற்றும் அ.சா.ஆ.5 ஆகும்.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

1 வது எதிரியை எதிரியை 30.09.2009 ந் தேதி 15.00 மணிக்கு சேத்தியாதோப்பு ராஜீவ் காந்தி சிலை அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிக்காவல் உடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 2 வது எதிரி கடலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் CRLMP. No. 4549/2009 dated 7.10.2009 ந் தேதியிட்ட உத்தரவின் மூலம் முன்பிணை பெற்றுள்ளார். பின்பு விசாரணையை முடித்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்த காரணத்தினால் எதிரியின் மீது 341, 352, 506(1), 497 இதச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கை புலன் விசாரணை செய்த அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். தற்போது ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஒரு பொய்யான புகாரின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் சம்பந்தம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகசர் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களை காவல்நிலையத்தில் தயார் செய்தார் என்றால் சரியல்ல. குறியீடு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் பொய்யான ஆவணங்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் சம்பந்தம் ஆஜர் எதிரிகளின் மீது ஒரு பொய்யான குற்ற இறுதியறிக்கை செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-Selvi. M. Mayadevi)
J.M.No.I, Chidambaram